



# ஹர ஹர சங்கரா

**FREE COPY**
June - 2025
Vol. 4 - ISSUE 08



# KODAMBAKKAM TIMES

Since:1950

ॐ

# RAMA IYER ®

TRUST TRADITION

Kitchen



- Catering
- Events
- Wedding Planners



- *Kalyanam*
- *Seemantham*
- *Ayush Homam*
- *Grahapravesam*
- *Sadabhisekam*

**Services:**

Customised
A - Z Wedding &
Event Management

**RAMA IYER KITCHEN**

No. 20, Hanumar Koil Street
West Mambalam, Chennai - 600 033
contact@ramaiyerkitchen.com
www.ramaiyerkitchen.com

**Contact:**

**88707 25549**

# "கதவைத் திற "காளி" வரட்டும்"

1960ல் காஞ்சி மகா பெரியவர் கல்கத்தாவில் முகாமிட்டிருந்தார். தினமும் ஆயிரக்கணக்கான வங்காளி பக்தர்கள், பெரியவரைத் தரிசனம் செய்து சென்றனர். அங்கு வசித்த நரசிம்மன் என்ற பக்தர் பெரியவரின் தீவிர பக்தர்.

ஒருநாள் தனது வழக்கமான பூஜைகளை முடித்த பெரியவர் பக்தர்களுக்கு தரிசனம் தர தயாரானார். அங்கிருந்த நரசிம்மனை அழைத்து "நரசிம்மா கல்கத்தாவில் ஒரு வேத பாடசாலை நிறுவ விரும்புகிறேன். அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். வேதாந்த மாணவர்கள் படிக்க தங்க எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். இந்த பணிக்கு நீயே பொறுப்பேற்க வேண்டும் ஏற்றுக் கொள்வாயா?" என்று கேட்டார்.



நரசிம்மன் பெரியவரின் உத்தரவை அப்படியே சிரமேற்கொள்வதாக தெரிவித்தார்.

இதன்பிறகு பாடசாலை அமைப்பதற்குரிய பல இடங்களைப் பார்த்தனர். ஒரு குறிப்பிட்ட இடம் நரசிம்மனுக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் பிடித்திருந்தது. ஒரு வங்காள தம்பதிக்கு சொந்தமான இடம் அது. நரசிம்மன் தனது நண்பர் ஒருவருடன் அவர்களது வீட்டுக்குச் சென்று வேதபாடசாலை நிறுவ இந்த இடம் வேண்டும் என அவர்கள் அந்த தம்பதியிடம் கேட்டனர்.

பெரியவரின் உத்தரவுப்படி நிறுவப்படும் வேத பாடசாலை என்பதால் அந்த தம்பதிக்கு மிக்க மகிழ்ச்சி. இடத்தைத் தருவதாக உறுதியளித்து விட்டனர். பத்திரம் பதிவதற்காக ஒரு குறிப்பிட்ட நாளில் அவர்களை வரச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன நாளில் நண்பர்கள் இருவரும் வங்காள தம்பதி வீட்டுக்குச் சென்றனர். ஆனால் திடீரென அவர்கள் தற்போது தங்களால் அந்த இடத்தைத் தர முடியாது என மறுத்து விட்டனர். நண்பர்கள் இருவரும் அவர்களது முந்தைய வாக்குறுதியை நினைவுபடுத்தினர். ஆனால் அவர்கள் வருந்தும் வகையில் சிலவார்த்தைகளையும் சொல்லி வெளியே அனுப்பி கதவையும் தாழிட்டு விட்டனர்.

ஆனாலும் நண்பர்கள் மேலும் சிலமுறை அந்த தம்பதியரை அணுகினர். ஆனால் காரியம் நடக்கவில்லை. இதற்குள் காஞ்சிக்கு சென்று விட்ட பெரியவரைச் சந்தித்து இடம் கிடைக்கவில்லை என்று சொல்ல எண்ணி மறுநாள் காலை 7 மணிக்கு சென்னை விமானத்தில் கிளம்ப திட்டமிட்டனர். அப்போது பெரியவர் சென்னை சமஸ்கிருத கல்லூரியில் முகாமிட்டிருந்தார். அவரைச் சந்தித்து விபரத்தைச் சொன்னார்கள்.

அதைக் கேட்டுக்கொண்ட பெரியவர் "நீங்கள் மாலை 5 மணி விமானத்திற்கு உடனே கல்கத்தா புறப்படுங்கள். நாளை காலை அந்த வீட்டிற்குச் செல்லுங்கள் அங்கு போய் வந்த பிறகு என்ன நடந்ததென்று சொல்லுங்கள்", என்றார். அவர்களும் அன்றே கல்கத்தா பறந்தனர்.

மறுநாள் காலையில் மகாபெரியவரை மனக்கண்ணால் தரிசித்து விட்டு அந்த வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டினர். என்ன ஆச்சரியம் அந்த தம்பதிகள் இவர்களை வரவேற்று நமஸ்கரித்தனர்.

"நேற்று இரவு எங்கள் இருவர் கனவிலும் காளிதோன்றினாள். வேதபாட சாலைக்கே இடம் கொடுக்க வேண்டும் என்று சொன்னாள். அந்த இடத்தை நாங்கள் உங்களுக்கே தருகிறோம்", என்று கண்ணீர் மல்கக் கூறினர்.

நரசிம்மன் நண்பர்களுக்கு மிகுந்த ஆச்சரியம். "உன் வீட்டுக் கதவைத் திற, வங்காளிகளின் உயிர் மூச்சான காளி உள்ளே வருவாள். உங்களுக்கும் அருள்வாள், உலகத்திற்கும் நன்மை செய்வாள்", என்று மகாபெரியவர் மூலமாக அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதோ", என்று நெகிழ்ந்து போனார்கள்.



# அமாவாசைக்கும் வாழைக்காய்க்கும் என்ன சம்பந்தம்

அமாவாசை அன்று வாழைக்காய் கறி அவசியம் சாப்பாட்டில் இருக்கவேண்டும் ஏன் தெரியுமா? எப்பாடுபட்டாவது எங்கு அலைந்து திரிந்தாலாவது வாழைக்காயுடன் தான் வீட்டுக்கு வர வேணுடும் என்று சொல்வார்கள் பெரியவர்கள்.

சிறு வயதிலிருந்தே இன்னமும் விடை கிடைக்காத கேள்வி அமாவாசைக்கும் வாழைக்காய்க்கும் என்ன சம்பந்தம். அமாவாசை அன்று ஏன் கட்டாயம் வாழைக்காய் சாப்பிட வேண்டும்? இதற்கு புராண காரணம் ஏதேனுமுண்டா?

நம்முடைய பித்ரு காரியங்கள் விஷ்ணு சாக்ஷியாகவே செய்கிறோம். அதனால் தான் ச்ரார்தத்தில் விஷ்ணு இலை என ஒருவரை வரித்து செய்யப்படுகிறது. மேலும் தக்ஷிணை, தாம்பூலம் முதலியவை துளசியுடன் (விஷ்ணு) சேர்த்து அளிக்கப்படுகிறது. மேலும் சமையலில் பயத்தம் பருப்பு எனும் பாசி பருப்பு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. பாசிபயறு என்பது புதனின் தான்யம், புதனின் அதிதேவதை விஷ்ணு.



மேலும் சங்கல்பங்கள் செய்யும்போது

திதிர் விஷ்ணு ததா வார : நக்ஷத்ரம்
"விஷ்ணுரேவச யோகஸ்ச கரணஞ்சைவ
சர்வம் விஷ்ணு மயம் ஜகத்"
என கூறி விஷ்ணு சாக்ஷியாக செய்கிறோம்.

அந்த விதத்தில் வாழைக்காய் புதனின் (விஷ்ணு) காரகமும், வாழைப்பழம் குருவின் (பிரம்மா) காரகமும் கொண்டது.

ஸ்ரார்தம் என்பது வசு ருத்ர ஆதித்ய எனும் மூன்று தலைமுறை மரபியலோடு தொடர்புடையது. அதேபோல வாழைக்காயும் குழந்தை பிறப்பு மற்றும் மரபியல் தொடர்புடைய காயாகும். மேலும் வாழை விதையிலிருந்து வருவதில்லை. ஒரு கன்றிலிருந்து தான் மற்றொரு கன்று தோன்றுகிறது. மேலும் வாழையின் பூ, பிஞ்சு, காய், கனி, தண்டு, இலை, நார் என எல்லா பாகமும் பயனை தந்து மோட்சம் அடைவதால் வாழைக்காய் பித்ரு காரியத்தில் பித்ரு மோட்சத்திற்கான காயாக உபயோக படுத்தப்படுகிறது.


You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

**K K NAGAR & VADAPALANI EDITION**

COVERING AREA :
Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

**044 2484 4114 / 93826 82128 / 89390 70034**

E-mail : kodambakkamtimes@yahoo.com



# ஆனந்தத்தை அள்ளித் தரும் நந்திகேஸ்வரர்

நந்தி பகவானை வளர் பிறை, தேய் பிறை, திரயோதசி திதிகளில் பிதோஷம் வேளையில் வழிபடுவது அனைவருக்கும் தெரியும். நந்தி என்றாலே ஆனந்தம் என்ற பொருள் உண்டு. அதற்கேற்ப எல்லோரையும் ஆனந்தமாக வைத்திருப்பார்.

நந்தியின் நிறம் வெள்ளை. வெண்மை என்பது தூய்மையைக் குறிப்பது. அறமாகிய தர்மத்தின் நிறமும் வெண்மையே. நந்தி தூய்மையும் தர்மமும் நிறைந்தது.

சிவபெருமான் திருநடனம் புரிகையில் நந்திதேவர் மத்தளம் வாசித்ததாக சிவபுராணம் கூறுகிறது. சிவபெருமான் நாட்டியக் கலையைப் பிரம்மாவுக்கு கற்றுக் கொடுக்க, அம்முறையை அறிந்த நந்தி பரத முனிவருக்கு கற்றுக் கொடுத்ததாக அபிநய தர்ப்பணம் என்ற பரத நாட்டிய நூல் கூறுகிறது.

திருமூலருக்கு குருவாக இருந்த நந்தியம் பெருமான் தான் ஒன்பது வேத ஆகமங்களை விளக்கி அருளியதாக புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிவபெருமான் நந்தி புராணத்தில் நானும் நந்தியும் வேறல்ல, ஒருவரே என்று கூறுகிறார்.

நந்தியைத் தொழுவது சிவபெருமானைத் தொழுவதற்கு சமமானது ஆகும். சிவன் கோவில்களில் சிவ ஆகமங்களின் அடிப்படையில் ஐந்து நந்திகளும் இடம்பெற்றிருக்கின்றன.

**நந்திகேஸ்வரரின் வேறு பெயர்கள் :**

ருத்ரன், தூயவன், சைலாதி, அக்னி ரூபன், மிருதங்க வாத்யப்ரியன், சிவவாஹனன், தருணாகர மூர்த்தி, வீரமூர்த்தி, தனப்ரியன், கனகப்ரியன், சிவப்ரியன், நந்தீசர், நந்தீஸ்வரர், நந்தியெம் பெருமான் என பல்வேறு பெயர்கள் உண்டு.

மூன்று முறை பிரதட்சணம் செய்தால் இஷ்டசித்தி
ஐந்து முறை பிரதட்சணம் செய்தால் ஜெயம்
ஏழு முறை பிரதட்சணம் செய்தால் சற்குணங்கள்
ஒன்பது முறை பிரதட்சணம் செய்தால் புத்திரப் பிராப்தம்
பதினோரு முறை பிரதட்சணம் செய்தால் ஆயுள் விருத்தி
பதிமூன்று முறை பிரதட்சணம் செய்தால் பிரார்த்தனை சித்தி
பதினைந்து முறை பிரதட்சணம் செய்தால் தனப்பிராப்தி
பதினேழு முறை பிரதட்சணம் செய்தால் தன விருத்தி
நூற்றெட்டு முறை பிரதட்சணம் செய்தால் அஸ்வமேதயாக பலன்

**நந்திகேஸ்வரர் துதி**

நந்தியெம் பெருமான் தன்னை நாள் தோறும் வழிபட்டால் புத்தியில் ஞானம் சேரும், புகழ், கல்வி தேடிவரும், இவ்வுலக இன்பம்யாவும் இவரடி தொழ உண்டு. அவ்வுலக அருளும்கூட அவர்துதி பாட உண்டு, முற்பிறவி வினைகள்யாவும் தீயிட்ட மெழுகாகும். நந்தியின் பார்வை பட நலங்கள் உடன் கிட்டும், ஈசனுக்கு எதிர் அமர்ந்து இறை ஊஞ்சல் ஆட்டுவிக்கும் நந்தீசர் நற்பாதம் நாம் தொழுவோமே.

நந்தி பகவானை வணங்குவதால் நமது மனதில் இருக்கும் தீமையானவை அனைத்தும் நீங்கி நமது கோரிக்கைகள், நல்லெண்ணங்கள், நியாயமான விருப்பங்கள் அனைத்தும் நிச்சயம் நிறைவேற அருள்புரிவார். சிவபெருமானின் பரிபூரண அருளை பெறலாம். அதோடு வாழ்வில் எப்போதும் ஆனந்தம் நிலைத்திருக்கும், குருவின் ஆசி கிடைக்கும், மேலும் மனமானது அமைதிகொள்ளும்.

நந்தி பகவானுக்கு அருகம் புல் மாலையை சாற்றி, அரிசி மாவில் வெல்லம் கலந்து நைவேத்தியம் செய்து வழிபட்டால் நோய்கள் மற்றும் வறுமை நீங்கும், பிள்ளை பேறில்லாதவர்களுக்கு குழந்தைகள் பிறக்கும்.

கோவில்களில் நந்தியை தரிசிக்காமல் சிவபெருமானை தரிசிக்க முடியாது. ஆனால் நந்தியை மட்டுமே தரிசனம் செய்தால் கூட சிவபெருமானை தரிசித்த முழுபலனும் கிட்டும்.

அதே போல பரமேஸ்வரனிடம் வைக்கும் வேண்டுதல்களை நந்திகேஸ்வரரிடம் வைத்தால் போதும். அவர் அதை சிவபெருமானிடம் சேர்த்து விடுவார் என்பது ஐதீகம்.



# நாகவழிபாடு செய்யும் முறைகள்

புற்று இருக்கும் இடத்தைச் சுற்றி முதலில் சாணத்தால் மெழுகிக் கோலமிட வேண்டும். தினமும் காலையும், மாலையும் விளக்கேற்றிப் பால் வைத்து வழிபடுவது மிகவும் நல்லது. சூடம் ஏற்றி வழிபாடு செய்து புற்றுக்குப் பால் ஊற்றினால் நல்லது நடக்கும்.

புற்று முழுவதும் மஞ்சளைப் பூசி, அங்கங்கே குங்குமப் பொட்டு வைப்பது தமிழ்நாட்டில் சில இடங்களில் வழக்கமாக உள்ளது. சில பெண்கள் புற்றுக்கு முன்பாகப் பொங்கல் வைத்து படைப்பதுண்டு. தங்களது வேண்டுதல்கள் நிறைவேறப் பிரார்த்தித்து எலுமிச்சையை புற்றின் மீது வைக்கும் வழக்கம் உள்ளது. புற்றை மூன்று முறை வலம் வந்து அம்மனை வேண்டினால் எண்ணியவை நிறைவேறும் என்று பக்தர்கள் நம்புகிறார்கள்.

நாக வழிபாடு கீழ்க்கண்ட காரணங்களுக்காக நடைபெறுகிறது.

குடும்பம் நலமாக இருக்க வேண்டி வழிபடுதல்

மகப்பேறு வேண்டி வழிபடுதல்

பிரசவம் இடையூறு இன்றி நடைபெற வேண்டி வழிபடுதல்

கேது திசை நடப்பவர்கள் புற்று வழிபாடு செய்து நோய் வராமல் தடுக்க வேண்டுவார்கள்

நாக தோஷம் உள்ளவர்கள் அத்தோஷம் நீங்கப் புற்று வழிபாடு செய்வார்கள்

தொழு நோய் நீங்கவும் புற்று வழிபாடு செய்யப்படுகிறது

குழந்தைகள் தோஷங்கள் காரணமாக அடிக்கடி உடல் நலம் பாதிக்கப்படுவார்கள். அவர்கள் நலமுடன் வாழவும் புற்று வழிபாடு நடைபெறுகிறது.

**நிவேதனம் - பிரசாதம் :**

நாக வழிபாட்டிற்கு என நிவேதனப் பொருட்கள் உள்ளன.

**நிவேதனம் :**

புற்று வழிபாட்டில் பாலும், வாழைப் பழத்துண்டுகளும் முக்கிய இடம் பெறுகின்றன. புற்று வழிபாட்டுக்குரிய காணிக்கைப் பொருட்களைக் கருப்புத்துணியில் வைத்து சந்தனம், பூ இவற்றுடன் சேர்த்துப் பொழுது சாயும் நேரத்தில் புற்றில் செலுத்த வேண்டும்.

**பிரசாதங்கள் :**

நாகத்தை வழிபாட்டு தெய்வமாகக் கொண்ட நாகர்கோவில், கும்பகோணம், திருநாகேஸ்வரம், சங்கரன் கோவில் கர்நாடகா குக்கீ சுப்ரமணிய சாமி கோவில் உள்பட சில தலங்களில் புற்று மண்ணே பிரசாதமாகக் கொடுக்கப்படுகின்றன. இத்தலங்களில் உள்ள புற்று மண் அள்ள அள்ளக் குறையாமல் கிடைக்கின்றன.

இப்புற்று மண் பல வியாதிகளைக் குணப்படுத்துவதாக நம்புகின்றனர். சில இடங்களில் புற்றிலிருந்து எடுத்த ஒருவித மையைப் பிரசாதமாகக் தயாரித்து குணப்படுத்துவதாகக் கூறுகிறார்கள்.

பொதுவாக செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்கள் நாக வழிபாட்டிற்கு ஏற்றது. ஞாயிற்றுக்கிழமை வழிபாடு செய்வது மிகவும் சிறப்புடையது. குழந்தை இல்லாதவர்கள் நாகத்தை சிலை வடிவில் அமைத்து ஆறுமாதம் தண்ணீரிலும் ஆறுமாதம் நெய்யிலும் வைத்து பூஜை செய்து அரசமரத்தில் வைத்து வழிபடுவார்கள். ஆயில்ய நட்சத்திரம் உகந்தது.

# பாஞ்சஜன்யம்

பாஞ்சஜன்யம் என்பது ஒரு அபூர்வமான சங்கு. பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் கைகளில் இருப்பது இந்த சங்கு தான்.

ஒரு சங்கில் உள்ளே 4 சங்குகள் இருக்கும். மொத்தத்தில் ஐந்து சங்குகள். ஆகவே பாஞ்சஜன்யம் என்பார்கள்.

பாஞ்சஜன்யம் என்பது கடலில் கிடைக்கும் ஒரு சங்கு தான். ஆனால் அந்த





சங்கு சாமான்யமாக கிடைப்பதில்லை. ஆயிரம் சிப்பிகள் சேருமிடத்தில் ஒரு இடம்புரி சங்கு கிடைக்குமாம். ஆயிரம் இடம்புரி சங்குகள் விளையும் இடத்தில் ஒரே ஒரு வலம்புரி சங்கு கிடைக்குமாம்.

வலம்புரி சங்குகள் ஆயிர கணக்கில் எங்கு இருக்கிறதோ அங்கே அரிதான சலஞ்சலம் என்ற சங்கு கிடைக்குமாம். சலஞ்சலம் சங்கு பல்லாயிர கணக்கில் உற்பத்தியாகுமிடத்தில் அரிதினும் அரிதான பாஞ்சஜன்ய சங்கு கிடைக்கும்.



சங்கொலி என்பதே பிரணவ ஓசையை வெளிப்படுத்தும் ஒரு இயற்கை வாத்தியம். அதிலும் சுத்தமாக அக்ஷரம் பிசகாமல் பிரணவ மந்திரத்தை ஒலிப்பது பாஞ்சஜன்யம் சங்கு மட்டும் தான். அந்த சங்கு கிருஷ்ணன் கையில் மட்டும் தான் இருக்கும்.

விஷ்ணோர் முகோத்தா நில பூரிதஸ்ய யஸ்ய த்வநிர் தானவ தர்ப்பஹந்தா :
தம் பாஞ்ச ஜன்யம் சசி கோடி சுப்ரம் சங்கம் ஸதா(அ)ஹம் சரணம் ப்ரபத்யே

மகாவிஷ்ணுவின் பவளச் செவ்வாய் வழியே வெளிவரும் காற்றினால் ஒலி எழுப்பப்படுவதும் தன் கம்பீர

ஓசையால் அசுரர்களுக்கு ஒலி அச்சத்தைக் கொடுக்கக் கூடியதும், வெண்மை வண்ணத்தில் ஒரு கோடி நிலவுகளில் ஒளிக்கு ஈடானதுமான பாஞ்சஜன்யம் என்ற சங்கை வணங்குகின்றேன் எப்போதும் சரணடைகின்றேன்.

இப்படிப்பட்ட அபூர்வமான பாஞ்சஜன்ய சங்கு மைசூரில் உள்ள ஸ்ரீசாமுண்டீஸ்வரி தேவியின் ஆலயத்தில் அன்னையின் அபிஷேகத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. சங்கின் நுனியிலும், அடியிலும், விளிம்பிலும் தங்க வேலைப்பாடுகள் செய்யப்பட்டு சங்கின் நுனியில் ரத்தினங்கள் கொண்டு அழகு படுத்தப்பட்டுள்ளது.

இந்த சங்கு மைசூர் சமஸ்தான மன்னர்களால் மைசூர் சாமுண்டீஸ்வரி அன்னைக்கு காணிக்கையாக வழங்கப்பட்டது.

# காயத்ரி மந்திரத்தின் 24 எழுத்துக்களின் தேவகள்

1. தத் - ஆத்யா
2. ஸ - ப்ராஹ்மீ
3. வி - வைஷ்ணவீ
4. துர் - ஸாம்பவீ
5. வ - வேதமாதா
6. ரே - தேவமாதா
7. ணி - விஸ்வமாதா
8. யம் - மதம்பரா
9. பர் - மந்தாகினீ
10. கோ - அஜபா
11. தே - ருத்தி
12. வ - ஸித்தி



13. ஸ்ய - ஸாவித்ரீ
14. தீ - ஸரஸ்வதீ
15. ம - லக்ஷ்மீ
16. ஹி - துர்கா
17. தி - குண்டலினீ
18. யோ - ப்ரஜானீ
19. யோ - பவானீ
20. ந - புவனேஸ்வரீ
21. ப்ர - அன்னபூர்ணா
22. சோ - மஹாமாயா
23. த - பயஸ்வினீ
24. யாத் - த்ரிபுரா

# மகாபாரதத்தின் சராம்சம் ஒன்பதே வாக்கியங்களில்

நீங்கள் பெண்ணாக இருந்தாலும் சரி, ஆணாக இருந்தாலும் சரி, நீங்கள் ஏழையாக இருந்தாலும் சரி, பணக்காரராக இருந்தாலும் சரி, நீங்கள் உங்கள் நாட்டில் இருந்தாலும் சரி, வெளிநாட்டில் இருந்தாலும் சரி கீழே உள்ள

மகாபாரதத்திலிருந்து 9 முத்தான கருத்துகளை படித்து புரிந்து கொள்ளுங்கள் வாழ்வில் கடைபிடியுங்கள்.

1. உங்கள் குழந்தைகளின் நியாயமற்ற கோரிக்கைகள் மற்றும் ஆசைகளை நீங்கள் சரியான நேரத்தில் கட்டுப்படுத்தவில்லை என்றால் நீங்கள் வாழ்க்கையில் ஆதரவற்றவர்களாகிவிடுவீர்கள்.

— கௌரவர்கள்

2. நீங்கள் எவ்வளவு பலசாலியாக இருந்தாலும் அநீதியை ஆதரித்தால் உங்கள் பலம், ஆயுதங்கள், திறமைகள், ஆசிகள் அனைத்தும் பயனற்றதாகிவிடும்.

— கர்ணன்

3. உங்கள் பிள்ளைகள் தங்கள் அறிவை தவறாகப் பயன்படுத்தி மொத்த அழிவை ஏற்படுத்தும் அளவுக்கு அலட்சியம் செய்யாதீர்கள்.

........ அஸ்வத்தாமா

4. ஒருவருக்கு நாம் தரும் வாக்குறுதி வேறு ஒரு சமயத்தில் அறமற்ற அநியாயக்காரர்களின் அதிகாரத்திற்கு பணிந்து ஏற்க வேண்டும் என்ற நிலை வரும் என்பதல் தேவையற்ற வாக்குறுதிகளை ஒருபோதும் கொடுக்காதீர்கள்.

........ பீஷ்ம பிதாமஹர்

5. செல்வம், பதவி, அதிகாரம் மற்றும் தவறு செய்பவர்களின் ஆதரவு ஆகியவற்றின் துஷ்பிரயோகம் இறுதியில் மொத்த அழிவுக்கு வழிவகுக்கிறது.

........ துரியோதனன்

6. ஒரு குருடனிடம் அதிகாரக் கடிவாளத்தை ஒருபோதும் ஒப்படைக்காதீர்கள். அதாவது சுயநலம், செல்வம், பெருமை, அறிவு, பற்று அல்லது காமத்தால் குருடனாக இருப்பவர்களுக்கு அது அழிவுக்கு வழி வகுக்கும்.

........ திரிதராஷ்டிரன்

7. அறிவுடன் ஞானமும் இறைவன் துணையும் இருந்தால் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்.

........ அர்ஜுனன்

8. வஞ்சகமும், சூதும் உங்களை எல்லா நேரங்களிலும் எல்லா விஷயங்களிலும் வெற்றிக்கு அழைத்துச் செல்லாது.

........ சகுனி

9. நீங்கள் நெறிமுறைகள், நீதி மற்றும் கடமையை வெற்றிகரமாக நிலைநிறுத்தினால் உலகில் எந்த சக்தியும் உங்களைத் தீங்கு செய்யாது.

........ யுதிஷ்டிரர்



குரு சரணம் குரு நாதா சரணம்

# நலம் நல்கும் நல்லூர் சிவன்

சிவபெருமானின் கயிலை மலைக்கு இணையாக விளங்கும் நல்லூர் கல்யாண சுந்தரர் கோயிலின் சிறப்புகளை நாம் அறிந்து கொள்வோம்.

தஞ்சாவூர்-கும்பகோணம் செல்லும் வழியில் பாபநாசத்துக்கு கிழக்கே 3 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள நல்லூர் கல்யாண சுந்தரர் கோவில் மாடக் கோவில் வகையில் கட்டப்பட்ட கோவிலாகும். இத்திருத்தலமானது காவிரி நதியின் துணை நதியான குடமுருட்டியின் கரையில் அமைந்துள்ளது. தேவார பாடல் பெற்ற காவிரி தென் கரைத் தலங்களில் 20-வது தலமாகும்.

தேவாரத்தில் 2-ம் திருமுறையில் திருஞானசம்பந்தர் பதினொரு பாடல்களில் திருமுறையாகத் தொகுக்கப்பட்ட தேவாரத்தில் பத்து பாடல்களிலும் பாடிய தேவார பாடல் பெற்ற ஸ்தலமாகும். "வடபாற் கயிலையும், தென்றால் நல்லூரும் தம் வாழ்பதியே" என்று திருநாவுக்கரசர் தன் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

இக் கோயிலின் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் சிறப்புடையதாகும். இக் கோயிலின் ஸ்தல விருட்சம் வில்வ மரம். இந்த வில்வ மரம் தான் முதன் முதலில் தோன்றியது என்பதால் "ஆதி மரம்" என்று அழைக்கப்படுகிறது. மூலவர் சுயம்பு லிங்கமாக தாமிர நிறத்தில் காட்சியளிக்கிறார். இவர் தினந்தோறும் ஐந்து நிறங்களில் தோன்றுவதால் "பஞ்சவர்ணேஸ்வரர்" என்று அழைக்கப்படுகிறார். கோயிலில் உள்ள சிவலிங்கமானது பகலில் ஐந்து முறை முதல் ஆறு நாழிகையில் தாமிர நிறத்திலும். பின்னர் வரும் ஒவ்வொரு ஆறு நாழிகைக்கும் முறையே வெளிர் சிவப்பு, தங்க நிறம், மரகத பச்சை பிறகு என்ன நிறம் என்று தெரியாத நிறமாகவும் மாறும். இந்த அதிசய நிகழ்வானது இன்றும் கோவிலில் நடந்து வருகிறது. அமர்

நீதியார், அப்பர் ஆகியோருக்கு அருள் புரிந்ததால் ஆண்டார் என்றும், பேரழகுடன் காணப்படுவதால் சுந்தரநாதன், சவுந்தரநாயகர் என்றும் போற்றப்படுகிறார். அம்பாள் திரிபுரசுந்தரி தனி சன்னதியில் அருள்பாலிக்கிறார்.

உலகத்தை சமநிலைப்படுத்திய அகத்தியருக்கு அவருடைய வேண்டுதலுக்கு இணங்கி தன் கல்யாண திருக்கோலத்தை காட்டி கருவறையில் இறைவனும், இறைவியும் அமர்ந்த நிலையில் இரு புறமும் திருமாலும், பிரம்மனும் நின்ற திருக்கோலத்தில் அருள் பாலிக்கிறார்கள். பக்தர்கள் தங்கள் வேண்டுதல் நிறைவேற இறைவனுக்கு திருக்கல்யாணத்தை நடத்துவார்கள். ஆனால் இறைவனே மனம் கனிந்து தன் திருமண திருக்கோலத்தை காட்டி அருளியதால் இத்தலத்து ஈசனை தங்கள் இருப்பிடத்தில் இருந்தபடியே வேண்டிக் கொண்டாலும், திருமணம் கை கூடும் என்பது நம்பிக்கை.

இத்திருத்தலத்திற்கு பாண்டவர்களின் தாய் குந்திதேவி வந்து நாரத முனியை சந்தித்தார். அன்று மாசி மகம் என்பதால் கடலில் நீராடுவது சிறந்த புண்ணியம் என்று நாரர் கூறியதைக் கேட்ட குந்தி சிவனை வேண்ட அவர் தன் பக்தைக்காக கோயிலின் எதிரிலுள்ள தீர்த்த குளத்திற்கு ஏழு கடல்களையும் வருமாறு செய்தார். அதில் குந்திதேவியும் நீராடி பேறு பெற்றார். அந்த ஏழு கடல்களையும் குறிக்கும் விதமாக ஏழு கிணறுகள் இக் குளத்திற்குள் உள்ளது. அன்று முதல் இது "சப்த சாகரம்" எனப் பெயர் பெற்றது. இதனால், மகம் பிறந்தது நல்லூரில், மகாமகம் பிறந்தது கும்பகோணத்தில் என்ற வழக்குண்டு. மகாமகக் குளத்தில் நீராடினால் எத்தகைய பலன் கிட்டுமோ அப் பலனை இத்திருத்தலத்து திருக்குளத்தில் நீராடினாலும் கிட்டும் என்கிறது தல புராணம்.

**வரலாற்றுச் சிறப்பு :**

திருவானைக்கா சம்பு லிங்க பெருமானை சிலந்தி வடிவில் வழிபட்டு மறு பிறவியில் கோச்செங்கேட் சோழனாக பிறந்தவன், சிவபெருமானுக்கு யானை ஏறாத வண்ணம் அமைப்பு கொண்ட எழுபது கோயில்களை அமைத்தான். அதில் பெரிய அளவில் அமைந்த கோயிலே திருநல்லூர் கோயிலாகும்.

**சடாரி சாற்றும் முறை :**

பெருமாள் கோயில்களில் பக்தர்களுக்கு திருவடியை நிறைவூட்டும் விதமாக சடாரி தலையில் வைப்பது வழக்கம். ஆனால் நல்லூர் சிவாலயத்தில் அபூர்வ முறையாக சிவபெருமானின் திருவடி பதிக்கப் பெற்ற சடாரியை தரிசனம் செய்ய வரும் பகதர்களுக்கு சூட்டும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது.

சிவனாரின் பல வடிவங்களில் ஒன்றான கணநாதர், பலிபீட வடிவில் இக்கோயிலில் அமைந்துள்ளது.

இவ்வாறு பல விதமான வரலாற்றுச் சிறப்புகளை தன்னுள் கொண்டுள்ள நல்லூர் (கல்யாண சுந்தரர்) பஞ்சவர்ணேஸ்வரரை வணங்கி இல்லறத்தில் இருந்து கொண்டே நல்லறமும் செய்து இறையடியை பற்றும் பற்றற்ற நிலையை அளித்து ஆட்கொண்டு அருள வேண்டுவோம்.

........ ஹேமலதா க்ருஷ்ணகுமார்

# KRISHNA DELISH COFFEE

GREAT TASTE




## எங்களிடம் தரமான காபி கொட்டை அரைத்து தரப்படும்

## 1 கிலோ காபி பவுடர்

## ரூ 920 மட்டுமே

---

## நம்ம ஆத்து காபி

## FILTER COFFEE RS. 20 only

**COFFEE POWDER DOOR DELIVERY FREE ALSO AVAILABLE**

* Condition Apply

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

Mylapore
Ganapathy's
CELEBRATING
83
Years
ANNIVERSARY
Since 1942

மயிலாப்பூர்
# கணபதிஸ்
®
ஸ்தாபிதம் 1942

## வெண்ணெய் & நெய்

### *பாரம்பரியமாக 1942 முதல்*

ஊத்துக்குளி வெண்ணெய் • ஊத்துக்குளி நெய்
மர செக்கு எண்ணெய் • அப்பளம் வகைகள் • பொடிகள்
உடனடி மிக்ஸ் • ஊறுகாய் வகைகள் • தொக்கு வகைகள்
இனிப்பு வகைகள் • கார வகைகள் • வடாம் • வத்தல்
உலர் பழங்கள் • ஸ்பைசஸ் • பேக்கரி வகைகள்
ஊர் ஸ்பெஷல்ஸ் • சீர் பட்சணம்

**மயிலாப்பூர் கிளை :**
# 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
[பி. கே. மஹால் கல்யாண மண்டபம் அருகில்]
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292, 89390 27272

**மேற்கு மாம்பலம் கிளை :**
# 50, ஆர்ய கவுடா ரோடு,
[ ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்]
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363, 89390 36363

கருத்துக்களை தெரிவிக்க : 044 – 4856 6781 | வாட்ஸ் அப் : 73581 56781
மின்னஞ்சல் : info@mylaporeganapathys.com
ஆன்லைன் ஆர்டர்கள் www.mylaporeganapathys.com